# புத்தக மதிப்புரை

(புத்தக மதிப்புரை, புதன்கிழமை தோறும் வெளியாகும். புதிய புத்தகங்களை மட்டுமே, தலா இரண்டு பிரதிகள் வீதம் அனுப்பவேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:- ஆசிரியர், தினத்தந்தி, சென்னை-600007)

## கட்டற்ற மென்பொருள் இங்க்ஸ்கேப்




கம்ப்யூட்டர் வரைகலைத்துறையில் வெக்டார் வகை படங்களை உருவாக்க பயன்படும் கோரல்டிரா, இல்லுஸ்டிரேட்டர் ஆகிய மென்பொருளுக்கு இணையாக வந்திருக்கும் இலவச மென்பொருள்தான் இங்க்ஸ்கேப் ஆகும்.


வருங்காலங்களில் இந்த மென்பொருளின் ஆதிக்கம் பெருமளவில் இருக்கும் என்பதை கணித்து முதல் முறையாக இதற்கு தமிழில் புத்தகமாக வெளியிட்டிருப்பது பாராட்டிற்குரியதாகும். ஒவ்வொரு மெனுவையும் விளக்கப் படங்களுடன் தெளிவாக அனைவரும் புரிந்தும்கொள்ளும்படி விளக்கப்பட்டுள்ளது. கோரல்டிராவையும் இங்க்ஸ்கேப் மென்பொருளையும் ஒப்பிட்டு விளக்கி இருப்பது சிறப்பாகும். சாப்ட்வேர் அடங்கிய சி.டி.யுடன் வெளிவந்துள்ளது.

(ஆசிரியர்: ஜெ.வீரநாதன்; வெளியீட்டோர்: பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம், 167, போலீஸ் கந்தசாமி வீதி, ஒலம்பஸ், இராமநாதபுரம், கோயம்புத்தூர்-641045; விலை: ரூ.290.)

நன்றி : தினத்தந்தி – 13.12.2017

புத்தகப் பார்வை

## இங்க்ஸ்கேப் 0.92.2




| | |
|---|---|
| ஆசிரியர் | ஜெ. வீரநாதன் |
| பிரிவு | கணினித் தொழில்நுட்பம் |
| பக்கங்கள் | 96 |
| பதிப்பு | 2017 |
| ISBN | ----- |
| விலை | ரூ.290/- |
| பதிப்பகம் | பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம் |
| முகவரி | 167, போலீஸ் கந்தசாமி வீதி, ஒலம்பஸ், இராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641 405. |
| தொலைபேசி எண் | 0422 - 2323228 |
| அலைபேசி எண் | 9842213782, 9790013782 |

**புத்தகப் பார்வை:**



கணினிப் பயன்பாட்டிற்காகப் புதிது புதிதாக மென்பொருட்கள் அவ்வப்போது உருவாக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்து கொண்டே இருக்கின்றன. இந்தப் புதிய மென்பொருட்கள் கணினியில் செய்யும் பணிகளை மேலும் மேலும் எளிதாக்கிக் கொண்டே செல்கின்றன. இருப்பினும் , இந்த மென்பொருட்களைச் சந்தைப்படுத்தும் நிறுவனங்களிடமிருந்து விலைக்குப் பெற்றுப் பயன்படுத்த முடியாத பொருளாதாரச் சூழலில்தான் பல கணினிப் பயன்பாட்டாளர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு உதவும் வழியில் பல கட்டற்ற மென்பொருட்களாக உருவாக்கி இலவசமாகவும் சிலர் தனியாகவோ அல்லது அமைப்புகளின் வழியாகவோ வழங்கிக் கொண்டுதானிருக்கின்றனர். அந்த வழியில் வரைகலைத் தொழில்நுட்பத்திற்கு உதவக்கூடியதாக 'இங்க்ஸ்கேப்' எனும் கட்டற்ற மென்பொருளாக உருவாக்கப்பட்டு இலவசமாக இணையத்தில் கிடைக்கிறது.

கணினி வரைகலைத் தொழில்நுட்பத்தில் நல்ல திறனுடையவரும் , தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசினை இரண்டு முறை பெற்றவருமான ஜெ. வீரநாதன் அவர்கள் கட்டற்ற மென்பொருளாகக் கிடைக்கும் இங்க்ஸ்கேப் மென்பொருளை அனைவரும் கணினியில் நிறுவிப் பயன்படுத்திக் கொள்ள வசதியாக இந்நூலினை உருவாக்கித் தந்திருக்கிறார்.

இங்க்ஸ்கேப் மென்பொருளின் அறிமுகம் , இதற்கான மென்பொருளை இணையத்தில் தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவிக் கொள்ளுதல் போன்றவைகளுடன் தொடங்கும் இந்நூலில் நூலாசிரியர் , இங்க்ஸ்கேப்பில் இடம் பெற்றிருக்கும் கருவிகள் அதனைப் பயன்படுத்தும் வழிமுறைகள், இங்க்ஸ்கேப்பில் இடம் பெற்றிருக்கும் மெனுக்கள் மற்றும் கட்டளைகள் , அதனைச் செயல்படுத்தும் வழிமுறைகள் போன்றவைகளைச் சிறந்த திரைக்காட்சிப் படங்களுடன் அனைவரும் புரிந்து கொள்ளும் வழியில் எளிமையாக்கிக் கொடுத்திருக்கிறார். இங்க்ஸ்கேப்பின் புதிய பதிப்பான இங்க்ஸ்கேப் 0.92.2 மென்பொருளில் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய வசதிகள் , இங்க்ஸ்கேப் 0.92.2 மென்பொருளை நிறுவும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றியும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். பலரும் பயன்படுத்தி வரும் கோரல் டிராவுடன் இங்க்ஸ்கேப்பை ஒப்பிட்டு அதை அட்டவணைப்படுத்திக் கொடுத்திருப்பது சிறப்பாக இருக்கிறது. இந்த அட்டவணை, சில வழிமுறைகளைப் புரிந்துகொள்ள வசதியாக இருக்கிறது.

இந்நூலில், இங்க்ஸ்கேப்பில் உருவாக்கியவைகள், விசைப்பலகைக் குறுக்கு விசைகள் போன்றவைகளும் பின்பக்கங்களில் தரப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இங்க்ஸ்கேப்பை விரைவாக இயக்குவதற்கான வழிமுறைகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இதே போல் இங்க்ஸ்கேப் தொடர்பான இணையதளங்கள் குறித்த செய்திகள் ஒரு பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இணையதளங்களின் வழியாக இங்க்ஸ்கேப்பில் செய்யப்படும் புதிய மாற்றங்களை , சேர்க்கப்படும் புதிய வசதிகளைத் தேடுதலின்றித் தெரிந்து கொள்ள உதவுவதாக இருக்கிறது. இந்நூலில் இடம் பெற்றிருக்கும் தொழில்நுட்பச் சொற்கள் அகரவரிசைப்படி கடைசிப்பக்கங்களில் பட்டியலிடப்பட்டிருப்பதால் அதனுடன் தொடர்புடைய பக்கங்களுக்கு எளிதில் சென்று அதுகுறித்து அறிந்து கொள்ள உதவுகிறது.

இந்நூலுடன் இங்க்ஸ்கேப் 0.92.2 மென்பொருள் குறுந்தகடு ஒன்றும் சேர்த்துக் கொடுக்கப்பட்டிருப்பது உடனடியாக இம்மென்பொருளைக் கணினியில் நிறுவிக் கொள்ள வசதியாக இருக்கிறது. வரைகலைத் தொழில்நுட்பப் பணியைச் செய்து வரும் கணினி வரைகலைப் பணியாளர்கள் , அச்சகத்தினர் மட்டுமின்றி வரைகலைத் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ள விரும்புபவர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் சிறந்த வழிகாட்டியாக இந்நூல் அமைந்திருக்கிறது.

**- உ. தாமரைச்செல்வி**

23-12-2017

**நன்றி : முத்துக்கமலம் – இணைய இதழ் – 23.12.2017**
**http://www.muthukamalam.com/bookreview/p96.html**

ூண்டு:24 இதழ்:05

# தமிழ் கம்ப்யூட்டர்




வணிக பயன்பாட்டுக்கு வாட்சாப்

ுட்பத்தின் நுணுக்கங்கள் எளிய தமிழில்

ஜனவரி 1-15, 2018

ரூ.20




பிக் டேட்டாவை புரிந்து கொள்ளுங்கள்




சிஎஸ்எஸ் அனிமேஷன்




## உங்களை தொடர்ந்து கண்காணிக்கும் இணைய தொழில் நுட்பம்

நூல் அறிமுகம்

# கட்டற்ற மென்பொருள் இங்க்ஸ்கேப்




ஆசிரியர்: ஜெ. வீரநாதன்,
விலை: ரூ.290 (மென்பொருள் குறுவட்டு உடன்)
வெளியீடு: பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம்,
167, போலீஸ் கந்தசாமி வீதி, ஒலம்பஸ்,
இராமநாதபுரம், கோவை – 641 045.
செல்பேசி: 98422 13782, 97900 13782

அச்சுப் பணிகளையும், வரைகலைப் பணிகளையும் எளிமை ஆக்கியதில் கணினி வரைகலை மென்பொருள்களுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. குறிப்பாக அச்சுக்கு முந்தைய அச்சுக் கோப்பு, பக்க வடிவமைப்பு பணிகளை விரைவாகவும், சிறப்பாகவும் செய்ய இத்தகைய மென்பொருள்கள் உதவுகின்றன. மேலும் பல்வேறு பயன்களுக்கான டிசைனிங் பணிகளை நேர்த்தியாக செய்யவும் இவை பயன்படுகின்றன. பேஜ்மேக்கர் முதல் கோரல்ட்ரா, ஃபோட்டோஷாப், க்வார்க் எக்ஸ்பிரஸ், இன்டிசைன் வரை வரைகலை மென்பொருள்கள் பல இருக்கின்றன.

இவை தனியார் நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு, ஆண்டு உரிமக் கட்டணம் பெற்றுக் கொண்டு பயன்படுத்த அனுமதிக்கப் படுகின்றன. இவர்களால் உறுதி செய்யப்படும் உரிமக் கட்டணங்கள் பெரும்பாலும் வளர்ந்த நாடுகளின் பொருளாதார வசதிக்கேற்ப உறுதி செய்யப்படுவதால், நம்முடைய வாங்கும் திறனை விட அதிகமாக இருக்கின்றன. பெரிய நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், பெரிய கல்வி நிறுவனங்கள் போன்றவை மட்டுமே விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்தி வருகின்றன.

இந்த அளவுக்கு கட்டணம் செலுத்தி வாங்கும் அளவுக்கு பண வசதி இல்லாத வரைகலைஞர்கள் மற்றும் சின்ன நிறுவன உரிமையாளர்கள் பலர் கட்டணம் செலுத்தாமலேயே மென்பொருளை நகல் செய்து பயன்படுத்துகிறார்கள்.

மென்பொருள் நிறுவனங்களும் தங்கள் மென்பொருள்கள் பரவலாக போய்ச் சேரட்டும், விளம்பரம் ஆகட்டும் என்று கண்டும் காணாமலும் இருந்து வந்தன. இந்த அளவுக்கு இணைய வசதி இல்லாத முந்தைய காலக் கட்டத்தில் இவற்றைப் பயன்படுத்துபவர்கள் பற்றிய விவரங்களையும் அவர்களால் சேகரிக்க முடியவில்லை.

ஆனால் இப்போது இணைய இணைப்பு இல்லாத கணினிகளே இல்லை என்றாகி விட்டது. இதனால் மென்பொருள் நிறுவனங்கள் எந்தெந்த கணினிகளில் தங்கள் மென்பொருள்கள் நிறுவப்பட்டு உள்ளன என்பதை இணைய இணைப்பு வாயிலாக அறிந்து கொண்டு நகல் எடுத்து பயன்படுத்துபவர்களிடம் உரிமக் கட்டணம் செலுத்தி பயன்படுத்துங்கள் அல்லது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று கூறுகிறார்கள்.

இந்த நிலையில் வரைகலைஞர்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பாக வந்து இருப்பவைதான், ஓப்பன்சோர்ஸ் எனப்படும் கட்டற்ற மென்பொருள்கள். இவை, மென்பொருள்கள் அனைவருக்கும் விலை இல்லாமல் கிடைக்க வேண்டும் என்று எண்ணும் தன்னார்வ மென்பொருள் வல்லுநர்களால் உருவாக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இவற்றை யார் வேண்டுமானாலும் இலவசமாக பதிவிறக்கி உரிமையுடன் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த வகையில் ஃபோட்டோஷாப் மென்பொருளுக்கு மாற்றாக வந்து இருப்பது ஜிம்ப் எனும் ஓப்பன்சோர்ஸ் மென்பொருள். கோரல்ட்ரா, இல்லஸ்ட்ரேட்டர் ஆகிய மென்பொருள்களுக்கு மாற்றாக வந்து இருப்பது இங்க்ஸ்கேப். இப்படி பலவகையான மென்பொருள்களுக்கு மாற்றாக ஏராளமான கட்டற்ற மென்பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த வரைகலை பயிற்றுநர், திரு. ஜெ. வீரநாதன். கோவையில் பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம் என்ற பெயரில் பயிற்சி நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். நகரங்கள்தோறும் குறுகிய காலப் பயிற்சிகளையும் நடத்தி வருகிறார்.

ஏற்கெனவே பேஜ்மேக்கர், கோரல்ட்ரா, ஃபோட்டோஷாப், இன்டிசைன், இல்லஸ்ட்ரேட்டர், பவர்பாயின்ட், பிரீமியர், எம்எஸ் ஆஃபீஸ், ஜிம்ப் ஆகிய மென்பொருள்களை எவரும் எளிமையாக கற்றுக் கொள்ளும் அளவுக்கு புத்தகங்கள் எழுதி வெளியிட்டு உள்ளார்.

இவற்றைத் தொடர்ந்து இங்க்ஸ்பேஸ் என்ற கட்டற்ற, விலை அற்ற மென்பொருள் குறித்த நூலை எழுதி வெளியிட்டு இருக்கிறார்.

இந்த நூலில் இங்க்ஸ்கேப் மென்பொருளில் உள்ள கருவிகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய விரிவான விளக்கங்கள் இடம் பெற்று உள்ளன. தவிர மெனுக்களையும், கட்டளைகளையும் பயன்படுத்தும் முறைகளும் தெளிவாக விளக்கப்பட்டு உள்ளன.

இங்க்ஸ்கேப்பை நிறுவுதல், இதில் கொடுக்கப்பட்டு உள்ள புதிய வசதிகள், கோரல்ட்ராவுடன் ஒரு ஒப்பீடு, ஷ் போர்ட் ஷார்ட்கட்கள், இங்க்ஸ்கேப் தொடர்பான இணைய தளங்கள், தொழில்நுட்ப செய்திகள் போன்றவையும் தரப்பட்டு உள்ளன.

இந்த புத்தகத்துக்கு என நூலாசிரியர் எழுதி உள்ள தொடக்கப் பகுதியில் அவர் குறிப்பிட்டு இருக்கும் செய்திகள் அனைவரும் சிந்திக்கத் தக்க வகையில் உள்ளன. அதில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"நமக்குத் தெரிந்த வரையிலும், தற்போது கோரல்ட்ராவில் நமது பகுதி அச்சகதாரர்கள் என்னென்ன வேலைகளைச் செய்து வருகிறார்களோ, அந்த வேலைகளை எல்லாம் தாராளமாக இங்க்ஸ்கேப்பில் செய்யலாம். பல ஆயிரம் ரூபாய் கொடுத்து உரிமத்துடன் பயன்படுத்தும் மென்பொருளில் கிடைப்பவை எல்லாம் எந்த வித கட்டணமும் இல்லாமல் இந்த மென்பொருளில் தரப்பட்டு இருப்பதே இதன் சிறப்பு ஆகும்.

இலவசமாக கிடைக்கிறது என்பதால் இதனை குறைவாக எடை போட்டு விட வேண்டாம். உலக அளவில் ஏராளமான வல்லுநர்களால் இந்த மென்பொருள் முழுமையாக பயன்படுத்தப் படுகிறது. மேலும், இதில் மற்ற மென்பொருள்களில் கொடுக்கப்படாத பல புதிய வசதிகளும் தரப்பட்டு உள்ளன. கணினி வரைகலையில் அவற்றை பயன்படுத்தி வடிவமைப்பை மேம்படுத்த முடியும்.

தற்போது நீங்கள் கோரல்ட்ரா, இல்லஸ்ட்ரேட்டர் போன்ற மென்பொருள்களில் மிகச் சிறப்பாக, வேகமாக வடிவமைப்புகள் செய்து கொண்டு இருப்பீர்கள். ஆனால் இங்க்ஸ்கேப்புக்கு மாறுவதால் உங்கள் வேகம் மட்டுப்படும். அதற்காக மீண்டும் பழைய மென்பொருளுக்கு மாறுவதில் பொருள் இல்லை. எப்படியாயினும் முயன்று இந்த மென்பொருளை பழகிக் கொள்ளுங்கள். உறுதியாகச் சொல்கிறோம். வரும் நாட்களில் இந்த மென்பொருளின் பயன்பாடு மிக அதிகமாகவே இருக்கும்.

நமது எழுத்துகள் மொழி பெயர்க்கப்பட்டு வந்தவை அல்ல. ஒவ்வொரு மென்பொருளையும் நேரடியாக செயல்முறையாக பயன்படுத்தி பயிற்சி எடுத்து, புரிந்து கொண்டு விளக்கமாக எழுதுவதே நமது வழக்கம் ஆகும். இந்த நூலிற்கு சுமார் ஒன்றரை ஆண்டு காலத்தை செலவு செய்து உள்ளோம். இப்படி முழுமையாக செயல்பட்டு எழுதுவதாலேயே பலருக்கும் ஏற்படும் பலவிதமான ஐயப்பாடுகளுக்கும் முடிந்த அளவிற்கு விரிவான விளக்கம் கொடுக்க முடிகிறது."

மேற்கண்ட நூலாசிரியரின் கருத்துகள் நூற்றுக்கு நூறு சரியானது என்பதை இந்த நூலை படித்து முடித்த உடன் உணர முடிகிறது.

– நேர்மன்



நன்றி : தமிழ் கம்ப்யூட்டர் – ஜனவரி 1–15, 2018